# திருமலையும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய நெறியும்

(தி. அ. க்ருஷ்ணதாஸன், திருப்பதி).

மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களின் அருளிச்செயல்களை அலப்ய லாபமாகப் பெற்ற நூற்றெட்டுத் திருப்பதிகளில் சிறந்தவையென்று சொல்லப்படுகின்ற கோயில் திருமலை பெருமாள் கோயில் என்னும் மூன்றினுள்ளே நடு நாயகமாக விளங்குவது திருவேங்கடமலையாகும். இத் தலத்தை விஷ்ணு க்ஷேத்திரமென்றும், இதன்கண் திகழும் திருவேங்கடமுடையானைத் திருமாலென்றும் வேதம் இதிஹாஸம் புராணம் ஸ்ரீபாஞ்சராத்ர ஸ்ரீவைகாநஸாகமங்கள் ஆழ்வார்கள் அருளிய திவ்யப்ரபந்தங்கள் முதலிய ப்ரமாண க்ரந்தங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன என்பது அனைவரும் அறிந்த விஷயம். இத் திருப்பதியில் எம்பெருமானுக்கு ஸ்ரீவைகாநஸாகம முறைப்படி நித்ய திருவாராதன மஹோத்ஸவாதிகளெல்லாம் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றன. திருவேங்கடமுடையானைப் பற்றி இதிஹாஸபுராணங்களிலுள்ள ஏறக்குறையப் பன்னீராயிரம் ச்லோகங்களடங்கிய ஸ்ரீவேங்கடாசல மாஹாத்ம்யப் பகுதியும் நான்கு வேதங்கள்போலே பண்டிதர்களால் இக்கோவிலில் தினந்தோறும் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றது. இவையனைத்தும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய நெறிமுறைகளேயாயினும் ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தானுஸந்தானமும் எம்பெருமானார் முதலான பூர்வாசார்யர்களின் ஸம்பந்தமும் இல்லையாகில், திருமலையில் நடைபெறும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய நெறி முறைக்குப் பூர்த்தியில்லையாகையால், அருளிச்செயல்களின் அனுஸந்தானத்தைப் பற்றியும் பூர்வாசார்யர்களின் ஸம்பந்தத்தைப்பற்றியும் சிறிது விண்ணப்பிக்கப்படுகிறது. ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம் ஸ்ரீவேங்கடாசலேதிஹாஸமாலை திருமலையொழுகு முதலிய நூல்களிலுள்ள விஷயங்களேயன்றி வேறு விஷயங்கள் இதில் இடம்பெறவில்லை. ப்ராமாணிகர்கள் குற்றம் நீக்கிக் குணமுண்டேல் கொள்ளவேண்டுகிறேன்.

எம்பெருமானார் முதன்முதலாகத் திருமலைக்கு எழுந்தருளும்போது திருமலையடிவாரத்தில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஆழ்வார்களைத் திருவடி தொழுதாரென்று ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில் காண்கிறபடியாலும், திருமலைக்கெழுந்தருளின ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைத் திருமலைநம்பியும், அனந்தாழ்வானும், 'நாளைமுதல் இங்கு நடைபெறும் அத்யயனோத்ஸவத்தில் தேவரீர் நாலாயிரத்தையும் தேவகானத்திலேறிட்டு அனுஸந்திக்க வேணும்' என்று ப்ரார்த்தித்ததாகத் திருமலையொழுகில் உள்ளதனாலும், திருமலையில் எம்பெருமானார் காலத்துக்கு முன்பே அருளிச்செயலின் அநுஸந்தானமும் ஆழ்வார்களின் கோயில்களும் உண்டென்பது அறியக்கிடக்கின்றது. அருளிச்செயல் அநுஸந்திக்கும் முறையில் சில திருத்தங்கள் எம்பெருமானாரால் ஏற்படுத்தப்பட்டன என்பது பின்னர் விண்ணப்பிக்கப்படும்.

## திருவேங்கமுடையான் அருளிச்செயல் கேட்டருளும் ப்ரகாரம்

தினந்தோறும் காலைமாலைகளில் நடக்கும் தோமால ஸேவைகளில் (திருவாராதன காலங்களில்) திருவேங்கடமுடையான் அருளிச்செயல் கேட்டருளுகிறார். காலைத்தோமால ஸேவையில் திருப்பள்ளியெழுச்சியும் திருப்பாவையும் எழுத்தெழுத்தாக எண்ணி ஸேவித்து, அமுது செய்தவுடன் திருப்பாவை சாத்துமுறை செய்யப்படுகிறது. மாலைத் தோமால ஸேவையில்-திருப்பல்லாண்டு, பூச்சூடல், காப்பிடல், சென்னியோங்கு, விண்ணீல மேலாப்பு, ஊனேறுசெல்வத்து, தாயே தந்தை, வாடமருதிடை, ஏழையேதலன், ஒழிவில்காலம், உலகமுண்ட, கங்குலும் பகலும், ஆழியெழ, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற பதினைந்து பதிகங்கள் ஸேவித்து உடனே சாத்துமுறையாகும். இத் திருவாராதன காலங்களில் பெரிய ஜீயர் அல்லது சிறிய ஜீயர் அல்லது ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் திருத்துழாயை அர்ச்சகரிடத்தில் கொடுத்து, 'ஸாதித்தருள ஸ்ரீசைலேசதயா பாத்ர'மென்று தொடங்கிவிட்டு அருளிச்செயல் ஸேவித்துக்கொண்டே பெருமாளுக்குத் திருவாலவட்டம் ஸமர்ப்பித்துக் கொண்டிருப்பர். சாத்துமுறையாகும் போது அர்ச்சகர் ஜீயர் ஸ்வாமி கொடுத்த திருத்துழாயைப் பெருமாள் திருவடிகளில் சேர்த்துக்கொண்டிருப்பர். இப்படி மூலவர் உத்ஸவர்களிடம் நடக்கும் எல்லாச் சாற்றுமுறைக் காலங்களிலும் அந்தந்த மூர்த்திகளின் திருவடிகளில் திருத்துழாயை ஸமர்ப்பிக்கும் முறை நடந்து வருகிறது. சாத்துமுறையில் கடைசியில் பல்லாண்டு - ஸர்வதேச தசாகாலேஷு... மணவாளமாமுனியே இன்னுமொரு நூற்றாண்டிரும். ஸேவித்து முடிந்தவுடன் கோஷ்டிக்குத் தீர்த்தம் ஸ்ரீ சடகோபன் ப்ரஸாதங்கள் யதோசிதம் விநியோகிக்கப்படும்.

தோட - மால (தோட்டமாலை) அல்லது தோள்மாலை என்பது தோமா என்றாயிற்றென்பர். திருமலைக்குப் புஷ்ப மண்டபமென்று ப்ரஸித்தியுள்ளதனாலும் திருவாராதனத்தின் கடைசியில் புஷ்ப மாலை ஸமர்ப்பிப்பதனாலும் திருவாராதன ஸமயத்தைத் தோமால ஸேவை என்று முன்னோர் குறித்திருக்கலாம்.

வியாழக்கிழமைகள்தோறும் நடக்கும் பூலங்கித் தோமால ஸேவையில் வாடமருதிடைபோகிக்கு முன்பாக ஊன்வாடவுண்ணாதென்னும் திருமொழிய நுஸந்தானமுமுண்டு. வெள்ளிக்கிழமைகள் தோறும் மூலவருக்குத் திருமஞ்சனகாலத்தில் வெண்ணெயளைந்த, பின்னைமணாளனை என்ற இரண்டு பதிகங்களும் திருமஞ்சனமானவுடன் நாச்சியார் திருமொழியும், பிறகு நடக்கும் தோமால ஸேவையில் சிறிய திருமடலும் ஸேவித்து, அமுது செய்தவுடன் நாச்சியார் திருமொழி சாத்து முறை செய்யப்படும். வெள்ளிக்கிழமைகளில் மூன்று தோமால ஸேவைகள் நடைபெறும்.

ஒவ்வொருநாளும் உத்ஸவருக்கு நடக்கும் திருக்கல்யாணோத்ஸவத்தில் தேங்காயுருட்டும்போது வாரணமாயிரம் அநுஸந்திக்கப்படும்.

ஆண்டு முழுதும் காலையில் திருக்காப்பு நீக்கும்போது திருப்பள்ளியெழுச்சியே அநுஸந்திக்கப்பட்டுவந்ததென்றும், மணவாளமாமுனிகள் திருமலைக்கு எழுந்தருளியபோது தம்முடனிருந்த ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவுக்கு நியமிக்க, அண்ணா ஸுப்ரபாதம் ஸ்தோத்ரம் ப்ரபத்தி மங்களமென்னும் நான்கு துதிகளை விண்ணப்பிக்க, அதற்கு மனமகிழ்ந்த மாமுனிகள் - மார்கழி மாதத்தில் மட்டும் திருப்பள்ளியெழுச்சியையும், மற்ற மாதங்களில் இந்நான்கு துதி நூல்களையும்

திருக்காப்பு நீக்கும்போது அநுஸந்திக்கு மாறு நியமித்தாரென்றும் பெரியோர் பணிப்பர்.

திருக்கார்த்திகைத் தீபாராதனத்தின் போது திருவேங்கடமுடையான் மூலவரிடத்தில் வையந்தகளியா, அன்பே தகளியா, திருக்கண்டேன் என்ற மூன்று பாசுரங்களை ஜீயர் ஸ்வாமி முதலியோர் அநுஸந்திக்கையில் மூன்று ஹாரத்திகள் நடைபெறும். திருமாலைத் திருவிளக்கேற்றிக் கண்ட முதலாழ்வார்களின் பாசுரங்கள், 'செந்தமிழ்பாடுவார் (=முதலாழ்வார்கள்) தாம் வணங்கும் தேவர்' என்று கலியனால் சிறப்பிக்கப்பட்ட திருவேங்கடமுடையானுக்கு நடக்கும் தீபாராதனத்தில் அநுஸந்திப்பது அத்யந்தம் உசிதமன்றோ ?

மார்கழி மாதத்தில் பின்மாலை திருக்காப்பு நீக்கும்போது திருப்பள்ளியெழுச்சி, பின்பு தநுர்மாஸத் தோமால ஸேவையில் திருப்பாவை, காலைத் தோமால ஸேவையில் உபதேசரத்தினமாலை. மாலைத் தோமால ஸேவையில் திருவாய்மொழி நூற்றந்தாதி ஆகியவை ஸேவிக்கப்படும். வெள்ளிக்கிழமைகளில் திருமஞ்சனமானவுடன் நாச்சியார் திருமொழியும் தோமால ஸேவையில் சிறிய திருமடலும் அநுஸந்திப்பதில்லை. தோமால ஸேவையில் உபதேசரத்தினமாலை ஸேவித்து அமுது செய்தவுடன் சாத்துமுறை செய்யப்படும். மார்கழி மாதத்தில் அனத்யயனம் நீங்கி விட்டாலும் பின்மாலை திருப்பாவை ஸேவித்துவிட்டபடியால் காலைத் தோமால ஸேவையில் உபதேசரத்தினமாலையே ஸேவிக்கப்படும். மாலைத் தோமால ஸேவையில் மற்ற மாதங்களிற் போலவே நித்யாநுஸந்தானமே ஸேவிக்கப்படும்.

கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகைப் பண்டிகைக்குப் பிறகு காலை மாலைத் தோமால ஸேவையில் முற்கூறியபடி உபதேசரத்தினமாலையும் திருவாய்மொழி நூற்றந்தாதியும் முறையே ஸேவிக்கப்படும்.

ஒவ்வொரு திருவோணத்தின்போதும் மாலையில் திருமலையப்பன் புறப்பாட்டில் முதல் திருவந்தாதி ஸேவித்து வந்து, பெருமாள் கோபுரவாசலுக்குள் எழுந்தருளும்போது சாத்துமுறை. பல்லாண்டும் வாழித்திருநாமமுமுண்டு. ரோஹிணியில் கண்ணன் புறப்பாட்டில் பெரியாழ்வார் திருமொழியும், புநர்வஸுவில் சக்ரவர்த்தித் திருமகன் புறப்பாட்டில் பெருமாள் திருமொழியும் ஸேவித்து முன்பு போலவே கோபுரவாசலுக்குள் சாத்துமுறை செய்யப்படும். திருவாதிரைதோறும் எம்பெருமானார் திருமலையப்பனுடன் புறப்பட்டுத் திருவீதியெழுந்தருளும்போது இராமாநுச நூற்றந்தாதியை அநுஸந்தித்துக் கோபுரவாசலுக்குள் சாத்துமுறை செய்யப்படும். அனத்யயன காலத்தில் இவ்வெல்லாப் புறப்பாடுகளிலும் உபதேசரத்தினமாலை ஸேவிக்கப்படும்.

அழகியசிங்கர் மேயான்வேங்கடம் வராகப்பெருமாள் சேனைமுதலியார் ஆகியவர்களின் வருஷத் திருநக்ஷத்திரத்தின்போது திருப்பல்லாண்டு, கண்ணிநுண்சிறுத்தாம்பு, கோயில்திருவாய்மொழி, இராமாநுச நூற்றந்தாதி, உபதேசரத்தினமாலை ஆகியவை ஸேவித்துச் சாத்துமுறை செய்யப்படும். ஸ்ரீஜயந்தியன்று இரவில் உக்ர ஸ்ரீநிவாஸமூர்த்திக்கு நடக்கும் த்வாதசாராதனத்திலும், திருமலையப்பனுடைய வஸந்தோத்ஸவத்தின் மூன்றுநாளிலும், வராகப்பெருமானுடைய அத்யயனோத்ஸவத்திலும், திருமலையெம்பெருமானார் ஸந்நிதியில் நடைபெறும் மணவாளமாமுனிகள் சாத்துமுறையிலும் முன்புபோலவே ஸேவை சாத்துமுறைகள் நடக்கும்.

ஸ்ரீஜயந்தியன்று இரவில் கண்ணனுக்குத் திருமஞ்சனமானவுடன் பெரியாழ்வார் திருமொழிஸேவை சாத்துமுறைகள் நடைபெறும்.

மூன்று நாட்கள் நடக்கும் திருப்பவித்ரோத்ஸவத்தின்போது திருமலையப்பனுடைய மாலைப்புறப்பாட்டில் முறையே முதல் மூன்று திருவந்தாதிகள் ஸேவித்துச் சாத்துமுறை செய்யப்படும். ஹோமம் நடக்கும்போது திருவாய்மொழி ஸேவை உண்டு.

### ப்ரஹ்மோத்ஸவம்

புரட்டாசி மாதத்தில் நடைபெறுகிற திருவேங்கடமுடையானுடைய ப்ரஹ்மோத்ஸவத்தின் முதல்நாள் காலை த்வஜாரோஹணத்திற்காக நடக்கும் தோளுக்கினியான் புறப்பாட்டில் இயல்கோஷ்டியில்லை. இரவு சேஷவாகனத்தில் முதல் திருவந்தாதி. இரண்டாம்நாள் காலை சிறிய சேஷவானகத்திலும் இரவு ஹம்ஸ வாகனத்திலும் இரண்டாந் திருவந்தாதி. மூன்றும் நாள் காலை ஸிம்மவாகனத்திலும் இரவு முத்துப்பந்தலிலும் (சப்பரம்) மூன்றாந்திருவந்தாதி. நான்காம்நாள் காலை கற்பகவிருக்ஷத்திலும் இரவு ஸர்வ பூபாலத்திலும் (விமானம்) நான்முகன் திருவந்தாதி. ஐந்தாம்நாள் காலை பல்லக்கில் நாச்சியார திருக்கோலத்திலும் இரவு பெரிய திருவடி வாகனத்திலும் திருவிருத்தம். ஆறும்நாள் காலை சிறிய...
இரவு யானை வாகன...
தாதி. மாலையில் நட...
வத்தில் இயல் இல்லை...
லும் இயற்பாவிற்குப்...
வார் திருமொழியை...
ஸேவித்து முடிப்பா...
காலை சூர்யப்ரபையில்...
ப்ரபையிலும் எட்டாம்...
தேரிலும் பெரிய திரு...



திருத்தேர் நிலைசேர்ந்தவுடன் பெரியாழ்வார் திருமொழியும் பெரிய திருமொழியும் சாத்துமுறை செய்யப்படுகிறது. திருவாசிரியம் திருவெழுகூற்றிருக்கை சிறிய திருமடல் பெரிய திருமடல் ஆகியவற்றையும் திருத்தேர்ப் புறப்பாட்டிலேயே ஸேவித்து முடிப்பார்கள். எட்டாம்நாள் இரவு குதிரை வாகனத்தில் நாச்சியார் திருமொழி. ஒன்பதாம்நாள் காலையில் பல்லக்குப்புறப்பாட்டில் பெருமாள் திருமொழியும் உள்ளேயெழுந்தருளியவுடன் சூர்ணாபிஷேகத்தில் திருச்சந்தவிருத்தம் முதலாகக் கண்ணிநுண்சிறுத்தாம்பு ஈறாகவுள்ள ப்ரபந்தங்களும் திருக்குறுந்தாண்டகமும் ஸேவித்து, தீர்த்தவாரிக்காக ஸ்வாமி புஷ்கரிணிக்கெழுந்தருளும்போது திருநெடுந்தாண்டகம் சேவித்து நிறுத்தப்படும். ஸ்வாமி புஷ்கரிணிக்கரையில் ஸ்ரீவராகப்பெருமாள் ஸந்நிதி வாசலில் உபயநாச்சியாருடன் திருமலையப்பனுக்கும் சக்ரத்தாழ்வாருக்கும் அலங்காரத் திருமஞ்சனமாகிச் சக்ரத்தாழ்வார் தீர்த்தம் ஸாதித்தவுடன் திருவாராதனத்தில் திருப்பள்ளியெழுச்சி திருப்பாவை திருப்பல்லாண்டு கண்ணிநுண்சிறுத்தாம்பு கோயில்திருவாய்மொழி இராமானுச நூற்றந்தாதி உபதேசரத்தினமாலை ஸேவித்துச் சாத்து...
முறை செய்யப்படும்...
திருவாய்...

...ருளிய
...மேலும்

...ன் திருமார்பில்
...அகலகில்லேனி ந்
...எழுந்தருளியிருக்கச்
...தியில் திவ்யைச்வர்யம்

யொழுகில் காணப்படுகின்றது. ஆனால் அது அன்று நடவாமல் அடுத்த வருஷம் ஸ்ரீஜயந்தியன்று உக்ரமூர்த்திக்கு நடக்கின்றது. கோயில் திருவாய்மொழிதான் ஸேவிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் தெரியவில்லை. எட்டு ஒன்பதாம் நாட்களில் காலைவேளைகள் நீங்கலாக மற்ற நாட்களில் எல்லாம், வாகனத்திலிருந்து படிகளைந்து கோயிலுக்கெழுந்தருளும் போது கோபுரவாசலுக்குள் சாத்து முறையும், எம்பெருமானார் ஸந்நிதியில் இயற்சாத்துவாழிகளும் ஸேவிக்கப்படும். கோவில் வாசலில் நடக்கும் திருவந்திக் காப்பின்போது திருமலையப்பன் அமுது செய்யும் இயற்படியென்றே வழங்கப் படுகிற தோசைப்படி எம்பெருமானார்க்கு அமுதுசெய்விக்கப்பட்டு இயற்சாத்தின் போது விநியோகிக்கப்படும். திருப்பவித் ரோத்ஸவத்தில் மூன்று நாட்களிலும் எம்பெருமானார் திருமுன்பாக இயற்சாத்தும் இயற்படி விநியோகமும் நடக்கும். இரண்டு மூன்று வருடங்கட்கு ஒருமுறை தனியாக நடக்கும் நவராத்ரி ப்ரஹ்மோத்ஸவத்திலும் முற்கூறியபடியே ஸேவை சாத்துமுறைகளும் இயற்படியும் இயற்சாத்தும் நடைபெறும்.

ப்ரஹ்மோத்ஸவங்களில் திருவேங்கடமுடையான் திருநக்ஷத்திரமாய்த் தீர்த்த வாரி நாளான ச்ரவணத்தினன்று இரவுப் புறப்பாட்டில் இராமாநுசநூற்றந்தாதிச் சாத்துமுறையானவுடன் பெருமாள் கருட மண்டபத்தில் த்வாரபாலகரின் ஸமீபத்தின் வடக்குமுகமாக எம்பெருமானாரைக் கடாக்ஷித்துக்கொண்டே எழுந்தருளியிருந்து அமுதுசெய்து ஆஸ்தானம் கண்டருளுவர். ஒவ்வொருமாதத் திருநக்ஷத்ரமான திருவோணத்தில் கிழக்குமுகமாகக் கருடனைக் கடாக்ஷித்துக்கொண்டு ஆஸ்தானம் கண்டருளும் திருமலையப்பன் ப்ரஹ்மோத்ஸவத் திருவோணத்தில் மட்டும் வடக்குமுகமாக எழுந்தருளி எம்பெருமானாருக்கு ஸேவை ஸாதிப்பதை, ப்ரஹ்மோத்ஸவத்தை நன்றாக நடத்திவைத்ததற்காகத் திருமலையப்பன் எம்பெருமானார்க்கு உபயநாச்சியார்களுடன் தன்னை முற்றூட்டாக அனுபவிப்பிக்கும் ஸர்வஸ்வதானமென்று பெரியோர் அருளிச் செய்வர்.

## திருவத்யயனோத்ஸவம்

திருமலையில் திருவத்யயனோத்ஸவம் இருபத்து மூன்றுநாட்கள் நடைபெறுகிறது. வைகுண்டைகாதசிக்கு முன்பு வரும் அமாவாசையன்றிரவு தோமாலஸேவையாகி அமுதுசெய்தவுடன் திருமலையப்பன் உபயநாச்சியார்களுடன் புறப்பட்டுத் திருமாமணி மண்டபம் சேர்ந்து கிழக்கு முகமாக திவ்யஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பர். நம்மாழ்வார் திருமேனி திருமலையில் இல்லாத குறை ஒருவாறு தீர அவருக்கு ஆசார்யரான ஸ்ரீஸேநாபதியாழ்வான் ஸிம்ஹாஸனத்தின்கீழே பக்கத்தில் தெற்குமுகமாக வீற்றிருப்பர். மண்டபத்தின் கீழே எம்பெருமானாரும் தெற்கு முகமாகவே எழுந்தருளியிருப்பர். தளிகை கண்டருளியவுடன் ஜீயர் ஸ்வாமிகளும் அத்யாபகர்களும் இயற்பாவில் முதல் திருவந்தாதி முதலாகத் திருவிருத்தமீறாக உள்ள ப்ரபந்தங்களில் முதற்பாட்டும் சாத்துப்பாட்டுகளும் ஸேவித்துத் தொடங்குவர்கள். மறுநாள், அதாவது பகற்பத்தில் முதல்நாள் காலை இயற்பா முழுதும் ஸேவிப்பர்கள். அன்றிரவு திருப்பல்லாண்டும் வண்ணமாடங்கள் பதிகமும் தொடங்குவர்கள். இரண்டாம்நாள் காலை பெரியாழ்வார் திருமொழியில் முதலிரண்டு பத்துக்கள். இரவு சென்னியோங்குத் தொடக்கம். மூன்றாம்நாள் காலை பெரியாழ்வார் திருமொழி முடிவுபெறும், இரவு விண்ணீலமேலாப்புத் தொடக்கம். நான்காம்நாள் காலை திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும். இரவு ஊனேறு

செல்வத் தொடககம். ஐந்தாம்நாள் காலை பெருமாள்திருமொழி முதல் கண்ணிநுண் சிறுத்தாம்பு முடிய ஸேவை. இரவு பெரிய திருமொழியில் வாடினேன்வாடி, தாயேதந்தை தொடக்கம். ஆறும்நாள் காலை திருமொழியில் முதலிரண்டு பத்துக் கள். இரவு வாடமருதிடை தொடக்கம். ஏழாம்நாள் காலை மூன்று நான்கு பத் துக்கள். இரவு பண்டைநான்மறையும் தொடக்கம். எட்டாம்நாள் காலை ஐந்து ஆறு ஏழு பத்துக்கள். இரவு தெள்ளியீர் தொடக்கம். ஒன்பதாம்நாள் காலை எட்டு ஒன்பது பத்துக்கள். இரவு காதிற்கடிப்பு தொடக்கம். பத்தாம்நாள் காலை பத்து பதினொன்று பத்துக்கள். இரவு திருக் குறுந்தாண்டகமும் திருநெடுந்தாண்டக மும் ஸேவித்து, பெரியாழ்வார் திருமொழி பெரிய திருமொழி திருநெடுந்தாண்டகம் இவற்றைச் சாத்துவர்கள். அதன் மறு நாள் அதாவது இராப்பத்து முதல்நாள் தொடங்கி இரவில் திருப்பல்லாண்டு ஆரம்பித்துத் திருவாய்மொழியில் முறையே ஒவ்வொருபத்தாக ஸேவித்துப் பத்தாம் நாளிரவு திருவாய்மொழி சாத்து முறை செய்யப்படும். அதன்மறுநாளிரவு கண்ணிநுண்சிறுத்தாம்பு தனியாக ஸேவிக்கப்படும். அதற்கு மறுநாளிரவு இராமாநுசநூற்றந்தாதி உபதேசரத்தின மாலை ஸேவையாகிச் சாத்துமுறையில் இயற்சாத்து வாழித்திருநாமம் ஸேவிக்க அத்யயனோத்ஸவம் முடிவுபெறும். ஆகத் திருமலையப்பனுக்குத் திருவத்யயனோத் ஸவம் இருபத்து மூன்று நாட்கள். அதன் மறுநாள் வராகப்பெருமாளுக்குக் கோயில் திருவாய்மொழியுடன் அத்யயனோத்ஸவம் நடைபெறும்.

இராப்பத்து சாத்துமுறையன்றும் இராமாநுச நூற்றந்தாதி சாத்துமுறை யன்றும் சாத்துமுறை முடிவுபெற்றவுடன் எம்பெருமானர் புறப்பட்டு ப்ரதக்ஷிண மாக மூலவர்ஸந்நிதிக்கெழுந்தருளிக் கடரு மண்டபத்தில்த்வாரபாலகர்களிடம்எழு தருளியிருப்பர். அர்ச்சகர்மூலவரிடமிருந் பரிவட்டம் மாலை சேஷவஸ்த்ரம் இவ றைக் கொணர்ந்து எம்பெருமானருக் அணிவித்து ஸ்ரீசடகோபன் ஸாதிப்ப பிறகு ஜீயர்ஸ்வாமி முதலியோர் உடை வர் அநுஸந்திப்பதாக, குன்றமேந் அகலகில்லேன் ஒழிவில்காலம் பல்லாண் அடியோமோடும் என்ற பாட்டுக்களையு கத்யத்தில் ஓம் பகவந்நாராயண என் தொடங்கும் முதல் சூர்ணையையும் ஸேவி பர்கள். முன்னும் பின்னும் தனியனு வாழியும் முறையே உண்டு. கோஷ்டி கும் ஸ்ரீசடகோபன் ஸாதிப்பதுண்டு.

குன்றமேந்தி முதலிய பாசுரங்களின் ஸ்தானத்தில் தாயே தந்தையென்று என்ற பாசுரமொன்றே ஸேவிக்கப்படு மற்றவை முன்புபோலவே நடக்கு இப்படி எம்பெருமானர் மங்களாசா னம் செய்தருளுவதனால்தான் திருமலையி மூலபேரத்திற்கு ப்ராதான்யம் வந் தென்று திருமலையொழுகு தெரிவிக்கிற இவ்விதமாக இம்மூன்று நாட்களிலு மங்களாசாஸனம் முடிந்தபின்பு எம்பெ மானர் மறுபடியும் விமான ப்ரதக்ஷி மாகப் புறப்பட்டு தாடீபஞ்சகம் ராஜவிம்சதி கோஷ்டியுடன் தம்ஸந் சேர்ந்து தீர்த்தம் அனந்தாழ்வா (பாதுகை) ப்ரஸாதம் இவற் கோஷ்டியாருக்கு ப்ரஸாதிப்பர்.

தெலுங்கு வருஷப்பிறப்பாகிய யு திப் பண்டிகை தொடங்கி நாற்பது ந கள் திருமலையப்பனுக்கு நித்யோத்ஸ மாலைவேளையில் நடைபெறும். சி திருமடல் வீதியில் அநுஸந்திப்பர்கள். வீதிப்புறப்பாடு முடிந்தவுடன் எம்பெ மானர் ஸந்நிதிவாசலில் பெருமாள் எ தருளியவுடன் சுக்குவெல்லம் கட பருப்புச்சுண்டல் பகாளாபாத் அ செய்து கோஷ்டி விநியோகமாகும்.

எம்பெருமானாருக்குத் திருமலையில் நடைபெறுகிற பத்துநாளுத்ஸவத்தில் நாலாயிரஸேவை நடைபெறும். மாலைப் புறப்பாட்டுக்களில் பத்துநாட்களிலும் திருமலையப்பனுடனும் காலைப்புறப்பாட்டுக்களில் அப்பனுடைய ஸ்ரீசடகோபனுடனும் எம்பெருமானார் திருவீதி எழுந்தருள்வர். காலையில் திருவீதியிலும் பகலில் ஆஸ்தானத்திலும் இயற்பா முதலிய மூவாயிரஸேவையும் இரவு ஆஸ்தானத்தில் திருவாய்மொழிஸேவையும் நடக்கும். காலைப்புறப்பாடாகிக் கோபுரவாசலுக்குள் இயல் முடித்தவுடன் உள்ளே எழுந்தருளும்போது விமானப்ரதக்ஷிணத்தில் பத்துநாளிலும் தாடீபஞ்சக யதிராஜ விம்சதி அநுஸந்தானமும், ஸந்நிதி சேர்ந்ததும் இயற்சாத்தும் இயற்படி விநியோகமும் நடைபெறும். மாலையில் திருவீதியில் சிறிய திருமடல். சாத்துமுறையன்று உடையவர் ஸந்நிதிவாசலில் பெருமாள் எழுந்தருளித் திருவாய்மொழி சாத்துமுறை நடைபெறும்.

இயல்கோஷ்டியுடன் நடக்கும் திருமலைப் புறப்பாடுகளெல்லாவற்றிலும் கோபுரவாசலுக்குள் இயல் முடிக்கும்போது கோஷ்டிக்கு ஸ்ரீசடகோபன் ஸாதிப்பதுண்டு.

கீழ்த்திருப்பதியில் கோவிந்தராஜனுக்குக் காலைத் தோமால ஸேவையில் திருப்பள்ளியெழுச்சியும் திருப்பாவையும், மாலைத் தோமால ஸேவையில் நித்யாநுஸந்தானமும், அனத்யயன காலங்களில் உபதேசரத்தினமாலாதிகளும் உண்டு. கோவிந்தராஜன் சக்ரவர்த்தி திருமகன் திருச்சானூர்த் தாயார் இவர்களின் ப்ரஹ்மோத்ஸவங்களில் இயல் ஸேவிக்கும் க்ரமம் உடையவர்ஸந்நிதியில் இயற்சாத்து இயற்படிவிநியோகம் இவை எல்லாம் திருமலையிற்போல் நடைபெறும். திருச்சானூர்த் தாயாருத்ஸவம் அனத்யயனத்தில் வந்தால் உபதேசரத்தினமாலை திருவாய்மொழி நூற்றந்தாதிகளே ஸேவிக்கப்படும்.

கோவிந்தராஜன் மாதத்திரு நக்ஷத்திரம் உத்தரத்தில் திருவந்தாதிகளே வரிசையாக ஸேவிக்கப்படும். ஒவ்வொரு மாதப் பௌர்ணமியிலும் இரவு பூலங்கியில் பெருமாள் திருமொழி. வருஷத் திருநக்ஷத்திரம் பங்குனி யுத்தரத்தில் காலையில் எண்ணெய்க்காப்பில் நாச்சியார் திருமொழியும் இரவு பூலங்கியில் பெருமாள் திருமொழியும் ஸேவிக்கப்படும்.

திருமலையில் அத்யயனோத்ஸவம் தொடங்கும் அமாவாசைக்கு அடுத்த அமாவாசையில் தொடங்கும் ஸ்ரீகோவிந்தராஜனுடைய அத்யயனோத்ஸவம் திருமலையிற்போலவே நடைபெறும். ஆழ்வார்களும் ஆசாரியர்களில் எம்பெருமானாரோடு கூரத்தாழ்வானும் எழுந்தருளி நடைபெறுவது விசேஷம். பகற்பத்து சாத்துமுறை இராப்பத்து சாத்துமுறை கண்ணிநுண் சிறுத்தாம்பு இராமாநுசநூற்றந்தாதி நாட்களில் முறையே கலியன் நம்மாழ்வார் மதுரகவிகள் இராமாநுசன் ஆகியோர்க்குக் கோவிந்தராஜன் மூலவரிடம் மங்களாசாஸனமும் தாடீபஞ்சக, பராங்குசாஷ்டக, யதிராஜவிம்சதி ஸ்தோத்ராநுஸந்தானமும் திருமலையிற்போலவே நடைபெறும். இராப்பத்து சாத்துமுறையன்று மாலை நம்மாழ்வார் கோவிந்தராஜனுடன் திருவீதியெழுந்தருளும்போது, ஆழ்வார்மட்டும் பெருமாளைப் பிரிந்து சிறிதுதூரம் வடக்கே சென்று திருமலையைப் பார்த்தெழுந்தருளியிருந்து குன்றமேந்தி முதலிய பாசுரங்களை ஸேவிக்க மங்களாசாஸனம் செய்தருளித் திரும்பிக் கோவிந்தராஜனுடன் சேர்ந்து ஸந்நிதிக்கெழுந்தருள்வர். திருமலை மங்களாசாஸனம் முடிந்து கோவிந்தனுடன் சேரும்வரையில் ஆளவந்தார் ஸ்தோத்ராநுஸந்தானம். இரவு

திருமாமணி மண்டபத்தில் ஆழ்வார் திருவடி தொழுகிறார்.

கீழ்த்திருப்பதியில் உள்நம்மாழ்வார் வெளிநம்மாழ்வாரென்று நம்மாழ்வார் இருவர் ஸேவை ஸாதிக்கின்றனர். வெளி நம்மாழ்வார் அத்யயனோத்ஸவத்தில் கோவிந்தராஜனைத் திருவடி தொழுகிறார். பத்துநாளுத்ஸவம் ஸ்வப்ரபந்த ஸேவையுடன் கண்டருளுகிறார். உள்நம்மாழ்வார் கோவிந்தராஜனுடன் (சாத்துமுறையன்று) திருமஞ்சனமும் கோயில் திருவாய்மொழி சாத்துமுறையும் கண்டருளுகிறார். பெரியாழ்வாரும் இருவர் உளர். அவர்களில் வெளிப்பெரியாழ்வார் கோவிந்தராஜனுடன் (சாத்துமுறையன்று) திருப்பாவை திருவாய்மொழி சாத்துமுறை கண்டருளுகிறார்.

ஸேனைமுதலியார் பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான் குலசேகரர் உட்பெரியாழ்வார் தொண்டரடிப்பொடிகள் திருப்பாணாழ்வார் முதலியாண்டான் பட்டர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா இவர்களுக்குப் பத்துநாளுத்ஸவமில்லை. ஒருநாள் மட்டும் (சாத்துமுறை மட்டும்) மாதத்திருநக்ஷத்திரம் போல் நடக்கிறது. சேனை முதலியார் மூலவர் பக்கத்தில் இருக்கிறபடியால் அவர்க்குப் பெருமாளிடமிருந்து பரிவட்டம் மாலை ஸ்ரீசடகோபன் எல்லாம் உண்டு. மற்றவர்க்கு இல்லை.

ஸுதர்சனாழ்வான் சாத்துமுறையன்று கோவிந்தன் திருவீதி எழுந்தருளித் திரும்பியவுடன் கோயில் திருவாய்மொழி சாத்துமுறை நடக்கிறது. கூரத்தாழ்வான் சாத்துமுறைக்குக் கோவிந்தராஜன் எழுந்தருளுகிறார். திருவீதிப் புறப்பாடு இல்லை. கோயில் திருவாய்மொழிதான். இவ்விருவர்க்கும் ஒரே ஒருநாள்தான் உத்ஸவம்.

புண்டரீகவல்லித் தாயாருக்குப் பங்குனியுத்தரம் முடிய ஏழுநாளுத்ஸவம். ஆண்டாள் வெளிப்பெரியாழ்வார் கலியன் அனந்தாழ்வானுடன்கூடிய மதுரகவிகள் திருமலைநம்பி வேதாந்தாசாரியர் இவர்களுக்குப் பத்துநாளுத்ஸவம். சாத்துமுறை நாட்களில் காலையிலேயே இவர்கள் ஸந்நிதிக்குக் கோவிந்தராஜன் எழுந்தருளித் திருமஞ்சனம் திருப்பாவை சாத்துமுறை மாலையில் புறப்பாடு இரவில் திருவாய்மொழி சாத்துமுறை எல்லாம் நடைபெறுகிறது. இவர்களெல்லோர்க்கும் திருவாய்மொழியும் யதோசிதம் ஸ்வப்ரபந்தமும் ஸேவிக்கப்படும். வேதாந்ததேசிகருக்கு நாலாயிர ஸேவை நடக்கிறது. புண்டரீகவல்லித் தாயார் ஆண்டாள் தவிர்ந்த மற்றவர்க்குக் கோவிந்தராஜன் மூலவரிடம், திருவாய்மொழி சாத்துமுறையான பிறகு மங்களாசாஸனம் நடைபெறுகிறது. வேதாந்த தேசிகருக்கு மங்களாசாஸனம் இப்போது நடப்பதில்லை.

எம்பெருமானாருக்கும் மணவாள மாமுனிகளுக்கும் பத்துநாளுத்ஸவம். சாத்துமுறையன்று இவர்கள் ஸந்நிதிக்குக் கோவிந்தராஜன் மாலையில் எழுந்தருளி, இவர்களுடன் தினசர்யை எதிராஜவிம்சதி ஆளவந்தார் ஸ்தோத்ர கோஷ்டியுடன் திருவீதி எழுந்தருளி இவர்கள் ஸந்நிதி சேர்ந்தவுடன் அமுதுசெய்து திருவாய்மொழி சாத்துமுறை கண்டருளுகிறார். எம்பெருமானாருத்ஸவத்தில் எம்பெருமானார்க்குப் பத்துநாளும் இரண்டு வேளையும் புறப்பாடும் நாலாயிரமும், ஸந்நிதி சேர்ந்தவுடன் இயற்சாத்தும் இயற்படியும் உண்டு. மணவாளமாமுனிகளுக்கு நாலாயிர ஸேவையும், சாத்துமுறையன்று இரவுமட்டும் கோவிந்தராஜனோடு புறப்பாடும் நடைபெறுகிறது. எம்பெருமானாருக்குச் சாத்துமுறையன்று காலையிலும் மாலையிலும் கோவிந்தராஜனுடைய விமான ப்ரதக்ஷிணத்தில் தாடீபஞ்சக யதிராஜவிம்சதி கோஷ்டி நடைபெறுகிறது. மணவாளமாமுனிகளுக்குச்

...ாழுகில் காணப்படுகின்றது. ...ா வை ... அன்று நடவாமல் அடு... முடிந்த ...வத்தியன்று உக்ரமூர்த் திசர்யை ... நடக்... கோயில் திருவா... ...கப்படுகிறது. இ...குச் சாத்து ...வில்லை. எட்டு ...வோணம்) வட ...தோத்ராநுஸங் ...கலைவேளைகள் ...ம் உள்ளேயும் ... எல்லாம் ...

...ாபு கண்ணனுக்குப் பெரியாழ்வார் திருமொழியும் ஸ்ரீராமநவமியன்று கோவிந்தன் ஸந்நிதியிராமபிரானுக்கும் தனிக்கோயில் சக்ரவர்த்தித் திருமகனுக்கும் பெருமாள் திருமொழியும் ஸேவிக்கப்படும்.

பேரிசெட்டிமாரின் ஆதீனத்திலிருக்கும் திருக்கச்சிநம்பி ஸந்நிதியில் அவருக்குப் பத்துநாளுத்ஸவமும் திருவாய்மொழி ஸேவையும், சாத்துமுறையன்று அதே ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கிற தேவப் பெருமாளுடன் புறப்பாடும் நடைபெறுகிறது.

திருமலையிலும் திருப்பதியிலும் திருச்சானூரிலும் உள்ள எல்லா ஸந்நிதிகளிலும், ஸாதித்தருள ஸ்ரீசைலேச தயாபாத்ரம் என்று தொடங்கி அத்யாபகர்களைக்கொண்டு ஸேவையை நடப்பிக்கும் அத்யாபகத் தலைமை ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதிவிசிஷ்டரான பெரிய ஜீயர் ஸ்வாமியின் தனிப்பட்டதோர் செல்வமாகும். அவரில்லாதபோது ஸ்ரீமத்பரமஹம்ஸ சிறிய ஜீயர்ஸ்வாமியோ, அவருமில்லாதசமயத்தில் ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவரோ அப்பணியைப் பெரிய ஜீயர் ஸ்வாமிக்குப் பிரதிநிதியாகச் செய்தருளுவர்கள். இந்தப் பொறுப்பைத் தேசிகர் ஸந்நிதியிலும் வடகலை யேகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் மூலமாகப் பெரிய ஜீயர் நிர்வஹித்தருள்வர். தேசிகர் ஸந்நிதியில் ஸ்ரீசைலேச தயாபாத்ரத்திற்குப் பதிலாக ராமாநுஜதயாபாத்ரத்தை வடகலை யேகாங்கி தொடங்குவர்.

இப்பெரிய ஜீயர்ஸ்வாமிக்கு அத்யாபகத் தலைமைச் செல்வத்தோடு, தர்மகர்த்ருத்வம் சுமந்து மாமலர்நீர்சுடர் தூபங்கொண்டு செய்யும் அத்தாணிச்சேவகம் என்ற வேறிரண்டு செல்வங்களுமுண்டு. இவற்றுக்கெல்லாம் சம்மானமாக வேங்கடக்கோன்தானுமிழும் பொன்வட்டிலிலிருந்து கோஷ்டியியில் முதல் தீர்த்த மரியாதையும் மற்றபகுமானங்களும் ப்ரஸாத பணியாரப்பங்கும் பெற்று அநுபவித்து வருகிறார் இவர். இவையனைத்தும் எம்பெருமானார்க்கு இருந்தபடியினால் அவருடைய பரம்பரையில் வந்த இந்தப் பெரிய ஜீயர்ஸ்வாமிக்குப் பைத்ருகதனம் போல் அநுபவத்திலிருந்து வருகிறது. இத்தகைய மூன்று பெருமைகளும் பெற்ற ஜீயர்ஸ்வாமி இவரொருவரே. வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இனித் தீர்த்தக்ரமம்

1. பெரிய ஜீயர்ஸ்வாமி
2. சிறிய ஜீயர்ஸ்வாமி
3. தோழப்பாசாரியர்
4. அனந்தாண்பிள்ளையார்
5. கந்தாடையார்
6. ப்ரதிவாதிபயங்கரத்தார்
7. வீரவல்லியார்
8. தர்மபுரியார்
9. பரவஸ்துபட்டர்பிரான் ஜீயரைச் சேர்ந்தவர்கள்.

திருமலை திருப்பதி திருச்சானூர்களில் இதுவே தீர்த்தக்ரமம்.

இதுவரையில் திருமலை திருப்பதி திருச்சானூர்க்கோயில்களில் நடைபெறும்

திருநாள்கள் திவ்யப்ரபந்தாநுஸந்தானம் முதலிய விண்ணப்பிக்கப்பெற்றன. இனி அவற்றை நிறம்பெறுவிக்கும் பூர்வாசார்யர்களின் ஸம்பந்தம் விண்ணப்பிக்கப் பெறும்.

திருவேங்கடமுடையானுக்கு ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் தவிர மற்ற எல்லா ஆழ்வார்களுடைய மங்களாசாஸனமும் உண்டென்பது ப்ரஸித்தம். அவர்களுக்குள் ப்ரதானரான நம்மாழ்வார் த்வயமந்த்ரார்த்தமான உபாயவரணத்தையும் உபேயப்ரார்த்தனையையும் முறையே உலகமுண்டபெருவாயா ஒழிவில் காலம் என்ற இரண்டு பதிகங்கள் வாயிலாக இப்பெருமான் திறத்திலேயே செய்திருக்கிறாரென்பதும் அனைவரும் அறிந்ததேயாகும். இங்ஙனம் ஆழ்வார்களில் முக்கியமானவரும் ப்ரபந்நஜநகூடஸ்தருமான (=ப்ரபத்திநிஷ்டர்களான ஆசார்யர்களுக்கு மூலபுருஷருமான) நம்மாழ்வாருடைய ஸம்பந்தமே அவர் பரம்பரையில் வந்த பூர்வாசார்யர்கள் இத்தலத்தின்கண் மிக்க பற்றுடையவர்களாக இருந்தமைக்குக் காரணமாகும்.

### ஆளவந்தார்

திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு முன்பு இடது பக்கத்தில் ஆளவந்தார் சிறு குடிலொன்றை அமைத்துக் கொண்டு அதில் புஷ்பங்களை மாலையாகத் தொடுத்துப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து வந்தார் என்று ஸ்ரீவேங்கடாசலேதிஹாஸமாலை தெரிவிக்கின்றது.

### திருமலைநம்பி

எம்பெருமானாருக்கு மாதுலரான பெரிய திருமலைநம்பி ஸ்வாசார்யரான ஆளவந்தார் ஸந்நிதியில் திருவாய்மொழி கேட்கும்போது ஒழிவில் காலப்பதிகம் வந்தவாறே 'சுமந்து மாமலர் நீர் சுடர் தூபங்கொண்டு' என்ற பகுதியை விவரித்துக்கொண்டிருக்கிற ஆளவந்தாருடைய கட்டளையின்படி திருமலைக்கெழுந்தருளிப் பாபவிநாசதீர்த்தத்திலிருந்து திருமஞ்சனங்கொண்டுவந்து தினந்தோறும் ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தார். இவரது கைங்கர்யச்ரத்தையை உலகோர் அறியும்படியாகச் செய்யவேணுமென்றெண்ணித் திருவேங்கடமுடையான் ஒருநாள் நடுவழியில் வேடனாய்த் தோன்றி, தாத்தா தாகம் மிக்கிருக்கிறது, தீர்த்தம் தாருமென்று கேட்டான். அட வேடா, பெருமாளுக்காகத் தீர்த்தமெடுத்துச் செல்லுகிறேன். இது மனுஷ்யார்ஹமன்று என்று மறுத்துக் கூறிவிட்டுப் பெரியதிருமொழியநுஸந்தானத்தில் ஆழ்ந்து மகிழ்ச்சியோடு நம்பி தீர்த்தக்குடமெடுத்துச்செல்ல நிற்க அவரைப் பின் தொடர்ந்த வேடன் அவருக்குத் தெரியாதபடி மிக லாகவமாய் வில்லில் அம்பு தொடுத்து எய்து குடத்தின் வயிற்றில் துளைத்து அதிலிருந்து மிகச்சிறிய தாரையாக வரும் நீரையெல்லாம் குடித்துக்கொண்டே செல்கிறான். பெரிய திருமொழியினால் பகவத்குணங்களை ஆழ்ந்து அநுபவிக்கும் நம்பி வேடன் செய்ததைச் சிறிதுமறியாதிருந்தவர் சிறிதுதூரம் சென்றபிறகு நீர்பெருகிப் போவதனால் மெல்ல மெல்ல இலேசாய்ப் போன குடத்தைப் பார்த்து இது என் என்று திருமுகத்தைத் திருப்பி, நீர்த்தாரையைக் குடித்துக்கொண்டிருக்கும் வேடனைக் கண்டு, அடே வேடா அதிருஷ்டமற்றவனே, பெருமாள் தீர்த்தத்தில் துரோகம் செய்தாயே என்று அவனை நிந்தித்தார். தாத்தா கவலைப்படாதீர், ஸமீபத்தில் உமக்குத் தீர்த்தம் காட்டுகிறேன், அதிலிருந்து பெருமாளுக்குத் தீர்த்தமெடுத்துச் செல்லுமென்று கூறி அவரையழைத்துச்சென்று ஆகாச கங்கை தீர்த்தத்தில் விட்டு, அங்கு நீர் தென்படாமையால் அம்பினால் ஒரு குண்டுக்கல்லைத்

துளைத்து அதிலிருந்து நீர்த்தாரையை உண்டாக்கி, தாதா இந்த ஆகாச கங்கை பெருமாளுக்கு மிகப் பிரியமானது, இன்று முதல் இதிலிருந்தே எனக்குத் தீர்த்தம் கொண்டுவாருமென்று கூறி, தானே திருவேங்கடமுடையானென்பதைக் காட்டி மறைந்தான் அவ்வேடன். அவ் வியப்பைக் கண்ட திருமலைநம்பி ஆச்ரிதரிடத்தில் வேங்கடவனின் விளையாட்டுச் சுவைதான் என்னே என்று நினைத்து ஆச்சரியமடைந்தவராய் அக்குடத்தைச் சரிப்படுத்தித் தீர்த்தம் நிரப்பிவந்து பெருமாள் திருமுன்பே வைத்தார். திருவேங்கடமுடையான் அர்ச்சகரை ஆவேசித்து, வாரீர் ஸ்ரீசைலபூர்ணர்யரே, நீர் கொண்டு வந்த சுசியும் ருசியுமுள்ள தீர்த்தத்தாலே நடுவழியில் என் தாகம் தீர்ந்தது என்று கூறி அவரை மகிழ்வித்து, அவருடைய திருமஞ்சன கைங்கர்யம் தானுகந்ததென்பதை உலகிற்குக் காட்டியருளினான். இதைக் கண்ட நம்பி தம்மைப் பரமபாக்யசாலியாக எண்ணி அதுமுதல் அக்கைங்கர்யத்தில் அளவற்ற ஆசையுடையவராய் ஆகாசகங்கையிலிருந்தே தினந்தோறும் திருமஞ்சனம் கொண்டுவந்து ஸமர்ப்பித்துப் பெருமானை மகிழ்வித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார். (தாதா என்று இவரைப் பெருமாள் அழைத்தபடியால் இவருடைய ஸந்ததியார் தாதாசார்ய வம்சத்தவர் எனப்பட்டார்கள்) இவ்வாசார்யர்பெருமானே தர்சனஸ்தாபகரான எம்பெருமானுருக்குத் திருமலையிலிருந்து தினந்தோறும் இறங்கிவந்து அடிவாரத்தில் ஸ்ரீ ராமாயணரஹஸ்யார்த்தங்களை ஒருவருஷ காலம் உபதேசித்தவர்.

ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர்

எம்பெருமானுர்க்குத் திவ்யப்ரபந்தம் ஸ்தோத்ரம் பெரியோர்கள் அருளிச்செய்த நல்வார்த்தைகள் இவற்றை உபதேசித்தவராய் ஆளவந்தாருடைய சிஷ்யரான ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் ஒருகால் ஸ்ரீரங்கத்தில் திருக்கார்த்திகை மஹோத்ஸவத்தில் பெரிய பெருமாளைத் திருவடிதொழுது எம்பெருமானுருடைய அநுமதிபெற்றுத் திருவேங்கடமலைக்கு எழுந்தருளித் திருமலைநம்பி அனந்தாழ்வான் ஆகியவர்களால் எதிர்கொண்டழைக்கப்பெற்று அவர்கள் புருஷகாரமாகச் சென்று திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுதார். திருமலையப்பன் அவருக்குத் தீர்த்த ப்ரஸாதாதி வரிசைகளெல்லாம் ப்ரஸாதித்து 'வாரீர் அரையரே, நீர் நம் உடையவருக்குத் திருவாய்மொழியாசார்யராகையாலே நமக்கு மிகவும் உகந்த விஷயமாயிருக்கிறீர், ஆகையால் செந்தமிழாலே முந்துற முன்னம் நம்மைக் கவிபாடுகையாலே நமக்கு இனிய விஷயமான முதலாழ்வார்கள் கவியிலே ஒரு பாட்டைப் பாடும்' என்றருளிச் செய்ய, அரையர் முதல் மூன்று திருவந்தாதிகளில் முதற்பாட்டு முடிவுப்பாட்டுக்களையும் மனத்துள்ளான் வேங்கடத்தான் நெறியார்குழற்கற்றை என்னும் இரண்டு பாட்டுக்களையும் தேவகானத்தில் பாடத் திருவேங்கடமுடையான் மிகவுமுகந்து மறுபடியும் தீர்த்தம் ஸ்ரீசடகோபன் முதலான வரிசைகளையெல்லாம் ப்ரஸாதித்தான். இதைக் கண்டுகொண்டிருந்த நம்பியும் அனந்தாழ்வானும் அரையரைப் பார்த்து 'தேவரீர் நாளைமுதலாக அத்யயனோத்ஸவத்தில் ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்களைத் திருவேங்கடமுடையான் திருச்செவிசாத்தியருளும்படி தேவகானத்தில் ஏறிட்டுப் பாடியருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, அரையர் இது திருவேங்கடமுடையானுடைய நியமனமென்று மறுநாள் தொடங்கி எல்லாவற்றையும் பாடிப் பெருமானை உகப்பித்துத் திருநாள் முடிந்தவாறே பெருமாளிடமும் நம்பி அனந்தாழ்வான் அர்ச்சகர் முதலியோரிட

மும் அனுமதிபெற்று ஸ்ரீரங்கத்திற்கெழுந்தருளி, உடையவர் ஸத்கரிக்க, அவரிடம் தேவரீருக்குத் திருவாய்மொழி ஓதுவித்தேனென்று அடியேனைத் திருவேங்கடமுடையான் ஆதரித்த விஷயத்தை அடியேனால் சொல்லிவிட முடியாது என்று கூறி, திருமலைநம்பி அனந்தாழ்வான் நியமித்ததையும் அதைத் தாம் அநுசரித்ததையும் விவரமாக அருளிச்செய்தார். (திருமலையொழுகு)

இன்னொரு சமயம் இந்த அரையர் திருமலைக்கு எழுந்தருளித் திருவேங்கடமுடையானை மங்களாசாஸனம் செய்தருளும்போது பூர்வவாஸனையாலே கங்குலும் பகலுமென்ற பத்துப்பாட்டையும் தேவகானத்திலேறிட்டுப் பாடாநிற்க, பெருமாளுகந்து வாரீர் அரையரே, ஆழ்வார் நம்பக்கல் மோஹித்து நாயிகா தசையை அடைந்து நம்மையநுபவித்த ப்ரகாரத்தை அநுசரித்துக் காட்டினீர், இது நமக்கு மிகவும் இனியதாயிருந்தது, கலியன் நாயிகாதசாபந்நராய் நம்மையநுபவித்த சொல்லிலே ஒன்றைச் சொல்வீர் என்ன, அரையர் கலியன் மடலூர்ந்து பகவதநுபவம் பண்ணின சிறிய திருமடலைப் பரவசராய் ஈடுபட்டருளிச் செய்யக் கேட்ட திருவேங்கடமுடையான் அரையருக்கு வரிசைகளெல்லாம் ப்ரஸாதித்தருளினான். (திருமலையொழுகு)

எம்பெருமானார்

திருமலையிலும் திருப்பதியிலும் ஸ்ரீஸ்வாமி எம்பெருமானார் செய்தருளிய அமாநுஷக்ருத்யங்கள் கணக்கிலடங்கா. திருமலையொழுகு இதிஹாஸமாலை முதலிய சரித்திர நூல்களில் அவற்றையெல்லாம் காண்க. முக்கியமென்று கருதிய சில சரித்திரங்கள் மட்டும் இங்கு விண்ணப்பிக்கப்படுகின்றன.

இக்கலியுகாதியில் திருவேங்கடமுடையான் தன் பரமபக்தனாகிய தொண்டைமான் சக்ரவர்த்திக்குச் சத்ருஸம்ஹாரார்த்தமாகத் திருவாழி திருச்சங்குகளைத் தாம் கொடுத்தருளிய பெருமையை உலகோர்க்கு அறிவித்தற்பொருட்டுத் திருக்கைகளில் திருவாழி திருச்சங்குகளில்லாமல் ஸேவை ஸாதிப்பதைக் கண்ட காளஹஸ்திச்சைவர் சிலர், யாதவராஜன் திருமலையப்பனுக்குத் திருவாராதனம் செய்யும் ஸ்ரீவைகாநஸார்ச்சகர்களிடம் ஏதோ காரணமாகச் சிறிது கோபமுற்றிருந்த ஒரு சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, திருமலையப்பனைப்பற்றி இவன் கந்தனென்றும் சிவனென்றும் ஹரிஹரமூர்த்தியென்றும் தம் மனம்போனபடியெல்லாம் அரசனிடம் கூறி இத்திவ்ய தேசத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள முயன்றபோது, திருமலையிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களால் அழைக்கப்பெற்ற எம்பெருமானார் ஸ்ரீரங்கத்திலிருந்து எழுந்தருளி அரசனது சபையில் சைவர்களுடன் வாதம்புரிந்து ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண திவ்யப்ரபந்தாதி ப்ரமாணங்களை உபந்யஸித்துத் திருவேங்கடமுடையான் ஸ்ரீமஹாவிஷ்ணுவே என்று நிலைநாட்டியருளியதோடல்லாமல், இனி யாருக்கும் எவ்வித ஸந்தேகமும் உண்டாகாதபடி ஸ்வர்ணத்தில் சங்குசக்கரங்களை நிருமாணம் செய்வித்துப் பெருமாளது அநுமதிபெற்று அவற்றை அவர் திருக்கைகளில் சாத்தினார். இதனால் யாதவராஜன் மகிழ்ந்து எம்பெருமானார்க்குச் சிஷ்யனானான். சைவர்களை தேசப்ரஷ்டர்களாக்கினான். இது அவர் செய்தருளிய கார்யங்களில் சிகரமானதாகும். மேலும் கேண்மின்.

திருவேங்கடமுடையான் திருமார்பில் (சிலையுருவத்திலேயே) அகலகில்லேனிற்படியே பிராட்டி எழுந்தருளியிருக்கச் செய்தே, ஸந்நிதியில் திவ்யைச்வர்யம்

உண்டாகும் படிக்கு ஸ்வர்ணத்தினால் த்வி புஜையான திருமார்புநாச்சியாரை ஏறியருளப்பண்ணிப் பெருமாள் திருமார்பில் சாத்துவித்தார். நாஸிகாமூலம் தொடங்கிக் கேசாந்தமாகப் பெருமாளுக்குத் திருமண்காப்பு அணிவித்தார். செங்கனி வாயன் திருவம்சத்தில் பிறந்த பரமபாகவதர்களான ஸ்ரீவைகாநஸர்களின் திருக்கைகளாலேயே முன்புபோல் திருவாராதனம்கண்டருளும்படி கட்டளையிட்டார். மார்கழிமாதத்தில் க்ருஷ்ணனே சயனபேரமாக இருக்கும்படி நியமித்தார் பெருமாளுடைய திவ்யவிமானத்தில் ஸ்ரீவைகாநஸசாஸ்திரத்திற் கூறியபடியே நான்கு பக்கங்களிலும் வராஹ நாரஸிம்ஹ வைகுண்டநாத ஸ்ரீவேங்கடேசர்களை ஏறியருளப் பண்ணுவித்தார். திவ்யநகர அபிவிருத்திக்காகவும் ஸந்நிதியில் திவ்யைச்வர்யம் உத்தரோத்தரம் அபிவிருத்தமாம் படிக்கும், கௌதுகபேரமானமலை குனிய நின்ற பெருமாளை உத்ஸவமூர்த்தியாகவும் உத்ஸவபேரமான வேங்கடத்துறைவாரைக் கௌதுகபேரமாகவும் மாற்றியமைத்தார் திருவேங்கடமுடையானுக்கு முன்னமே வராகப்பெருமாள் திருவாராதனமாகி அமுதுசெய்தருளும்படி நியமித்தார். சிவபெருமானுக்கு ஸேவை ஸாதிப்பதற்காகத் தோன்றியதாக ப்ரஹ்மாண்டாதி புராணங்களில் சொல்லப்பட்ட அழகியசிங்கர்பக்கத்திலே அவருடைய பக்தனான எங்கள்சிவபிரானையும் ப்ரதிஷ்டைசெய்து கொள்ளுகிறோமென்று ஒருகால் சைவர்கள் சண்டையிட, வைஷ்ணவர்கள் அரசன் மூலமாக அதைத் தடுத்து நிறுத்தி, கலஹத்துக்குக் காரணமான இந்த அழகிய சிங்கருக்குத் திருவாராதனம் வேண்டாமென்று நிறுத்தி விட்டதாகக் கேள்விப்பட்ட எம்பெருமானார், இனிச் கலஹத்திற்கு இடமில்லாத படி திருமலை விஷ்ணு ஸ்தலமென்று ஸ்தாபிக்கப்பட்டுவிட்டபடியினால், அழகியசிங்கருக்குத் திருவாராதனலோபம் உண்டானால் ஸ்தலத்துக்கு அநிஷ்டமென்று நினைந்தருளி அவரைத் திருவேங்கடமுடையானுக்கு எதிரே ப்ரதிஷ்டை செய்வித்துத் திருவாராதனமும் நடக்கும் படி நியமித்தார். சோழவரசனது உபத்திரவத்தினால் திருச்சித்ர கூடத்திலிருந்து உபயநாச்சியாருடன் எழுந்தருளிய தேவாதி தேவனென்னும் கோவிந்தராஜ வுத்ஸவமூர்த்தியை ஒரு மூலவரையேறியருளப்பண்ணி அவருடன் கீழ்த்திருப் பதியில் ப்ரதிஷ்டைசெய்வித்தார். அவருடைய இடது பக்கத்தில் ஆண்டாளையும் ப்ரதிஷ்டை செய்வித்தார். திருமலை நம்பியை வழியில் தடுத்து அவர் கொண்டு செல்லும் திருமஞ்சனதீர்த்தத்தைத் திருவேங்கடமுடையான் அமுதுசெய்தருளிய ஐதிஹ்யத்தை அது நடைபெற்ற-அத்யயனோத்ஸவம்முடிந்த மறுநாளிலேயே, திருமலைநம்பி வம்சத்தில் பிறந்த ஸ்ரீவைஷ்ணவர் பாபநாசத்திலிருந்து தீர்த்தம் கொண்டு வரும்போது திருமலையப்பனை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுசென்று, அவர் அத்தீர்த்தத்தைப் பானம்செய்தருளும் பாவனையில் ஒருத்ஸவமாக நடத்திவைத்தார். அனந்தாழ்வான் தமது தோட்டத்தில் புஷ்பம் களவுபோவதைக் கண்டுபிடிக்கவேணுமென்று இரவில் தூங்காமல் தோட்டத்தில் சுற்றிவர, பெருமாளும் பிராட்டியுமாக ராஜதம்பதிகள் வேஷத்தில் எழுந்தருளி ஒருவருக்கும் தெரியாமல் புஷ்பங்களைக் கொய்துசெல்ல, ஒருநாள் அவருக்குக் கையும் களவுமாகப் பிடிபட்ட திவ்யதம்பதிகளில் பெருமாள் மட்டும் தப்புவித்துக்கொண்டு ஓடி அப்ரதக்ஷிணமாகக் கோவிலுக்குள்ளே புகுந்தாரென்றும், பிராட்டிபிடிபட்டு அனந்தாழ்வானால் செண்பக மரத்தில் கட்டுண்டு, 'என்னிடம் தவறேதுமில்லை, என்கணவன்தான் புஷ்பத்தைக் களவு

கண்டவன், தயைசெய்து என்னை விட்டு விடுவீரானால் உமக்கு நான் பெண்ணாக ஆவேன்' என்று கூறிக்கொண்டிருக்க, அப்போது பொழுது விடிந்து அர்ச்சகர் முதலியோர் திருமார்பில் நாச்சியாரைக் காணாமல் வருந்திநிற்க, பெருமாள் ஒருவனை ஆவேசித்து நடந்ததைச் சொல்லிப் பிராட்டியையும் அனந்தாழ்வானையும் அழைத்துவரும்படி கட்டளையிட, பரிஜனங்கள் தோட்டத்திற்கு வந்து விண்ணப்பிக்க, மணத்திற்குரிய பருவத்திலிருக்கும் கன்யையாக ஸேவைஸாதிக்கிற பிராட்டியைக் கட்டவிழ்த்துப்பொறாரை வேண்டி, அவள் கூறியபடியே தன்பெண்ணாக அவளையெண்ணி இடுப்பில் எடுத்துக் கொண்டு சென்று, பெருமாளை க்ஷமிக்கும்படி ப்ரார்த்தித்து அப்பிராட்டியைப் பெருமாளிடம் ஸமர்ப்பிக்க, அவள் சிலம் பார்க்கச் சென்று திருமார்பில் ஸ்வர்ணமயமான கண்டிகையில் சேர்ந்து முன் போல் விளங்கினாள் என்றும் சரிதத்தைக் கேட்ட எம்பெருமானார் ப்ரஹ்மோத்ஸவத்தின் ஏழாந்திருநாள் மாலை நடக்கும் தோட்டவுத்ஸவத்தில் பெருமாளை அப்ரதக்ஷிணமாக எழுந்தருளும்படிக்கும், எட்டாம் திருநாள் காலை நடக்கும் திருத்தேருத்ஸவத்தில் அனந்தாழ்வான் தோட்ட வாசலில் மருமகப்பிள்ளையான பெருமாளுக்கு அனந்தாழ்வான் மாமனார் செய்யும் ஸம்பாவனையாகத் திருப்பரிவட்டம் ஸமர்ப்பிக்கும்படிக்கும் நியமித்து நடத்தியருளினார். (அப்ரதக்ஷிணோத்ஸவம் இப்போது ஏழாம்நாளில் நடவாமல் தீர்த்தவாரி தினத்திற்கு மறுநாளில் நடக்கிறது) இங்ஙனே பல நியமனங்கள் திருமலை யொழுகில் காணத்தக்கன. இனி அருளிச்செயல் ஸேவையில் சில திருத்தங்கள் எம்பெருமானாரால் செய்தருளப்பட்டவை உள. அவை மேலே காண்க.

முதலாழ்வார்களின் பாசுரத்தைத் திருவேங்கடமுடையான் மிக விரும்பிக் கேட்டாரென்பதை ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் வாயிலாக அறிந்த எம்பெருமானார் — "செந்தமிழ்பாடுவார் தாம் வணங்கும் தேவர்" என்ற கலியனருளிச் செயல் துணுக்கைக்கு முதலாழ்வார்கள் வணங்கும் திருவேங்கடமுடையான் என்னும் பொருளைப் பெரிய பெருமாளுடைய சிஷ்ய ஸம்ப்ரதாயத்தில் கேட்டிருந்ததற்கு அரையர் கூறியதை ஸம்வாதமாக நினைத்தருளி, நாதமுனிகளின் திருவம்சத்தரான ஓர் அரையரை (ஸ்ரீரங்கத்தில் இருந்தவரை) அழைத்து மலை குனிய நின்றாரரையரென்று திருநாமம் சாத்தி, திருமலைக்குச் சென்று அத்யயனோத்ஸவத்தில் முதன்முதலாக இயற்பாவை அநுஸந்தித்துப் பின்பு முதலாயிரம் பெரிய திருமொழிகளை அநுஸந்தித்துத் திருவாய்மொழிசாத்திய மறுநாள், — அனந்தாழ்வான் நாள்தோறும் புஷ்பகைங்கர்யம் செய்துகொண்டும் ஆழ்வார்கள் திவ்ய ஸூக்திகளை ப்ரவசனம் செய்துகொண்டும் மதுரகவிகளைப்போல் சரமபர்வ நிஷ்டராய் எப்போதும் கண்ணிநுண் சிறுத்தாம்பை அநுஸந்தித்துக்கொண்டிருக்கிறவராய் மதுரகவிதாஸரென்று திருநாமம் பெறுகையாலே அவருக்கு — கண்ணிநுண்சிறுத்தாம்பை ஸந்நிதியில் பெருமாள் திருமுன்பு தனியாக அநுஸந்திக்கும்படி நியமித்து அவரைத் திருமலைக்கு அனுப்பியருளினார். அரையர் திருமலைக்கெழுந்தருளித் திருமலைநம்பி அனந்தாழ்வான் ஆகியவர்களோடு ஸந்நிதிக்குச் செல்ல, அனந்தாழ்வான் உடையவர் நியமனத்தைப் பெருமாளுக்கு விண்ணப்பிக்கத் திருமலையப்பனும் நம்மிராமாநுசன் நியமனத்தைப் பரிபாலனம் பண்ணுகிறோம் என்று உகப்புடன் அருளிச் செய்து அப்படியே நடத்தும்படி அனந்தாழ்வானுக்குக் கட்டளைபண்ணினான். அதுமுதல் இதுவரையில் அப்படியே

நடந்து வருகிறது. ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் கங்குலும் பகலும் திருவாய்மொழியையும் சிறிய திருமடலையும் தேவகானத்திலேறிட்டுப் பாடத் திருமலையப்பன் மிகவுமுகந்தானென்பதைக் கேட்ட எம்பெருமானுர் பகலில் திருமாலை சாத்தும்போது சிறியதிருமடலையும் மாலையில் நித்யானுஸந்தானத்தில் கங்குலும் பகலும் பதிகத்தையும் அநுஸந்திக்கும்படி நியமித்தார். (சிறியதிருமடல் இப்போது வெள்ளிக்கிழமையில் மட்டுமே அனுஸந்தானத்தில் உள்ளது.) வெள்ளிக்கிழமைகளில் மூலவருக்குத் திருமஞ்சனமானவுடன் திருமார்பிலுள்ள பிராட்டியை இறக்கித் திருமஞ்சனம் கண்டருளச் செய்யும்போது, பிராட்டியின் பிரிவைப் பொறுக்கமாட்டாத திருவேங்கடமுடையானுடைய விச்லேஷவ்யஸனத்தை ஒருவாறு பரிஹரிக்க நினைத்த எம்பெருமானுர், பிராட்டியின் அபராவதாரமாய் பூதேவியின் அம்சமான ஆண்டாள் பெருமாளைப் பிரிந்து ஆற்ருமையில் அநுஸந்தித்த நாச்சியார் திருமொழியைத் திருவேங்கடமுடையான் கேட்டுத் தரிக்கட்டுமென்று நினைத்து நாச்சியார் திருமொழியை அப்போது அநுஸந்திக்குமாறு ஆணையிட்டார். காசிராஜாவின் மனைவியினுடைய கனவில் திருவேங்கடமுடையான் தோன்ற, அவள் ஸந்தானம் வேண்டுமென்று அபேக்ஷிக்க, உன் நாஸாமணியை (மூக்குத்திருகு அல்லது புலாக்கு) எனக்குத் தந்தால் நான் உனக்கு ஸந்தானம் அருளுகிறேனென்று பெருமாள் அருளிச்செய்ய, என் கணவரின் ஸம்மதி வேணுமே என்று அவள் கூற, அப்படியானல் உனக்கு நான் பிள்ளைப் பேறு அருளுவதற்கும் என் அண்ணரான கோவிந்தராஜன் அனுமதி வேணுமென்று வேங்கடவன் அருளிச்செய்தான் என்ற ஐதிஹ்யத்தைக் கேட்டிருந்ததனுலும், திருவேங்கடமுடையானும் கோவிந்தராஜனும் ஸ்ரீவைகாநஸாகமத்தில் ஒரே ஸம்ஹிதையில் கூறியபடியே நித்யாராதன-மகோத்ஸவாதிகள் கண்டருளுகையாலும் எம்பெருமானுர் இவ்விருவரையும் ஒரு கோவிலிலுள்ள பஞ்சபேரங்கள்போல் ஐக்யமுடையவர்களாக நினைத்தருளி, திருவேங்கடமுடையான் மாலையில் நித்யானுஸந்தானம் கேட்டருளும்போது கோவிந்தராஜனுடைய ஊன்வாட, வாடமருதிடை என்ற இரு திருமொழிகளையும் கேட்டருளும்படியாகவும், கோவிந்தராஜன் மாலையில் நித்யானுஸந்தானம் கேட்டருளும்போது ஒழிவில்காலம், உலகமுண்ட என்ற இரண்டு திருவாய்மொழிகளையும் கேட்டருளும்படியாகவும் நியமனம் செய்தருளினுர். த்வஜாரோஹணத்தன்று மாலையில் யாகசாலையில் கலசங்களிலே தேவதாவாஹநம் பண்ணி ஆராதனத்தைச் செய்த பிறகு வேதபாராயணம் தொடங்குவது ப்ரமாணஸித்தமாகையாலே தத்ஸமமான த்ராவிடவேதத்துக்கும் தொடக்கம் அப்படியே செய்வது உசிதமாகையாலே இரவுப்புறப்பாட்டில் இயல் தொடங்கவேண்டுமென்றும் காலைப்புறப்பாட்டில் வேண்டாமென்றும் எம்பெருமானுர் நியமித்தார். பாராங்குசநாயகிக்கும் எம்பெருமானுக்கும் நடந்ததாக மின்னிடைமடவார் பதிகத்தில் உள்ள ப்ரணயகலஹத்தை, 'பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்' என்று திருத்தாயார் பராங்குசநாயகியைப் பிராட்டிமாராகவே சங்கிக்கையால் உபயநாச்சியார்க்கும் பெருமாளுக்கும் நடப்பதாக இரண்டு பக்கங்களிலும் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் 'புராணம் வாசிக்கச் செய்து, ஒருத்ஸவமாக (அத்யயனோத்ஸவம் இராப்பத்து ஆரும்நாள் மாலையில்) நடத்திவைத்தார்.

## திருமலையனந்தாழ்வான்

மேல்காட்டில் சிறுப்புத்தூரில் அவதரித்த அனந்தாழ்வான், ஆழ்வான் ஆண்டான் அருளாளப்பெருமாளெம்பெருமானுர் முதலிய சிஷ்யர்களால் ஆச்ரயிக்கப் பெற்ற எம்பெருமானுர் திருவடிகளில் ஆச்ரயிப்பதற்காகக் கோயிலுக்கு வர, அவரை எம்பெருமானுர் அருளாளப் பெருமாளெம்பெருமானுர் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினுர். ஆரம்பமே பிடித்து ஆசார்யபாரதந்த்ர்யத்தை விரும்பிய அனந்தாழ்வான் மிகவும் உகந்திருக்க, அருளாளப் பெருமாளெம் பெருமானுர் அனந்தாழ்வானிடம் 'குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினுற்போலே உடையவர் செய்தார், நீர் எம்பெருமானுர் திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்றருளிச் செய்தார். பின்பு உடையவரிடம் திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டுக் கொண்டிருக்கும்போது ஒழிவில்காலம் நடவாநிற்க 'சிந்துபூமகிழும் திருவேங்கடம்' என்ற இடம் ப்ரஸ்துதமாக, 'புஷ்பமண்டபமான பெரிய திருமலையிலே திருவேங்கடமுடையானுக்கு உகப்பாகத் திருநந்தவனம் செய்து திருமாலை கட்டிச் சாத்துவார் இக்கோஷ்டியில் ஆரேனும் உண்டோ?' என்று உடையவர் கேட்டருள, அனந்தாழ்வான் எழுந்திருந்து அடியேன் விடைகொள்ளுகிறேனென்று விண்ணப்பித்து ஆசார்யபரதந்த்ரராய் உடனே திருமலைக்கு எழுந்தருளிப் பெருமானை ஸேவித்துத் திருநந்தவனம் அமைத்து, முன்பு ஆளவந்தார் குடில் கட்டிக் கொண்டெழுந்தருளியிருந்த இடத்தில் யமுனைத்துறைவர் என்ற பெயரையுடைய ஓர் மண்டபத்தையும் உடையவருத்தரவின்படி ஏற்படுத்தித் தோட்டத்தில் மலரும் மலர்களை அம்மண்டபத்திற்குக் கொண்டுவந்து மாலையாகக் கட்டித் திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பித்து வந்தார். உடையவர் திருவாய்மொழி காலக்ஷேபத்தை முடித்துச் சாற்றுமுறை செய்துவிட்டுப் பெரிய பெருமாளிடம் அநுமதி பெற்றுத் திருமலைக்கெழுந்தருளித் திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுது தோட்டத்திற்கு எழுந்தருளிக் கடாக்ஷித்து 'வளர்த்ததனுல் பயன்பெற்றேன்' என்று கூறி அனந்தாழ்வானை அணைத்துக்கொண்டார். அனந்தாழ்வான் திருமலையில் ஏரிவெட்டும்போது கர்ப்பவதியான தம் தேவிகளைக்கொண்டு மண் சுமத்தாநிற்க, இதைக்கண்ட திருவேங்கடமுடையான் ஒருப்ரஹ்மசாரியுருவில் சென்று அவளிடமிருந்து நிர்ப்பந்தமாக மண்கூடையை வாங்கிக்கொண்டு சென்று மண்ணை வேறோரிடத்தில் சேர்த்து வருவதைக் கண்டு, அனந்தாழ்வான் நான் செய்யும் கைங்கர்யத்திற்குத் தடைசெய்யாதே, கூடையைத் தொடாதே என்று மிரட்டியும் கேளாது மண்கூடையை வாங்கிக்கொண்டு செல்லும் ப்ரஹ்மசாரியைத் துரத்திச்சென்று கடப்பாரையினுல் அவரையடித்தார். மோவாயில் பலமாக அடிபட்ட திருவேங்கடவன் கோயிலுக்குள் புகுந்துகொண்டு, பின்பு அனந்தாழ்வானுல் அபசாரக்ஷாமணம் வேண்டப்பெற்றுன். அனந்தாழ்வான் அடிபட்ட இடத்தில் புஷ்பதூளிகளை எடுத்து அழுத்தினுர். 'பக்தனுல் ஏற்படுத்தப்பட்ட இந்த இடத்திற்குத் தினந்தோறும் பச்சைக் கருப்பூரப் பொடியை அழுத்தி, நான் பக்தன் அடித்தாலும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்பவனென்பதை உலகறியச் செய்யுங்கோள்' என்று அர்ச்சகர்களுக்குத் திருமலையப்பன் ஆணையிட்டருளினுன். அடித்த கடப்பாரை பெருமாளுத்தரவின்படி பெரிய கோபுரவாசலுக்குள் வடக்குப்பக்கத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இன்றும் காணலாம். அனந்தாழ்வான் தோட்டத்தில் புஷ்பம்

பறியாகிற்கத் திருக்கையில் அரவம் தீண்டப் பின்புபோய் நீராடிப் புஷ்பம் பறித்தார். விஷம் தீர்க்க உபாயமேதும் செய்யவில்லை என்பதனையறிந்த திருவேங்கடமுடையான் விஷந்தீர்க்கவேண்டாவோ என்று கேட்டருள, ஸ்வாமீ, கடியுண்ட பாம்பு வலிதாகில் திருக்கோனேரியில் நீராடித் தேவரீருக்குத் தொண்டு செய்கிறேன். கடித்த பாம்பு வலிதாகில் விரஜையில் தீர்த்தமாடி ஸ்ரீவைகுண்டநாதனுக்குக் கைங்கரியம் செய்கிறேன் என்று கூறி, உடையவர் திருவருளால் தமக்கேதும் அபாயம் நேராதென்பதனை வெளியிட்டருளினார். ஒருநாள் அனந்தாழ்வான் யமுனைத்துறைவர் மண்டபத்தில் திருமாலை கட்டாநிற்க, திருவேங்கடமுடையான் அழைத்தருள, அப்பொழுது செல்லாமல் திருமாலை கட்டிமுடித்து எடுத்துக் கொண்டுசெல்ல, நான் அழைத்தபோது நீர் ஏன் வரவில்லை என்று பெருமாள் கேட்டருள, புஷ்பம் மலருவதற்குள்ளே மாலை கட்டவேணுமென்று உடையவருத்தரவிருக்க, தேவரீரால் எனக்கென்ன காரியம் என்ன, பெருமாள் நான் உம்மை இங்கிருந்து போகச்சொன்னால் நீர் என் செய்வீரென்ன, அனந்தாழ்வான் 'பரன் சென்று (=வந்து) சேர் திருவேங்கடம்' என்கிறபடியே தேவரீர் வந்தேறிகள். இந்த இடம் தேவரீரை ஆச்ரயித்தவர்கள தன்றோ? என்று கூறத் திருவேங்கடமுடையான் மிகவும் உகந்தருளினான். எம்பெருமானாருடைய அவதாரஸமாப்தியைக் கேட்ட அனந்தாழ்வான் திருவேங்கடமுடையானோடு முசித்து ஒருவருஷகாலம் திருநந்தவன கைங்கர்யத்தையும் உபேக்ஷித்திருக்கத் திருவேங்கடமுடையான் அனந்தாழ்வானை அழைப்பித்து, உமக்கென்னவேண்டும், நாமே தலைக் கட்டுகிறோம் என்ற பின்பு, ஒரு காலத்தில் தேவரீர் விட்டருளிய திருவாழி திருச்சங்குகளைத் தேவரீர்க்கு அளித்தும் பாஹ்யகுத்ருஷ்டிகள்மண்ணுண்ணும்படி, தேவரீரே பரதத்வமென்றும் மோக்ஷப்ரதமென்றும் நிருபித்து ஸ்ரீபாஷ்யம் செய்தருளியும் உபகரித்த எம்பெருமானார் விஷயமான நூற்றந்தாதியை, தேவரீர் அத்யயனோத்ஸவத்தின் முடிவில் திருச்செவி சாத்தியருளவேணும், ஏற்கெனவே உடையவரால் அடியேனுக்கு அளிக்கப்பெற்று அடியேன் திருவாராதனம் செய்துவரும் எம்பெருமானாரின் அர்ச்சாவதாரத் திருமேனியைத் தேவரீருடைய திருமுன்பே ஸந்நிதியில் திருப்ரதிஷ்டை கொண்டருள ஸம்மதிக்கவேணுமென்று அனந்தாழ்வான் விண்ணப்பிக்கப் பெருமாளும் மிகவும் உகந்து ஸம்மதிக்க அவ்விரண்டையும் அனந்தாழ்வான் நிறைவேற்றி வைத்தார்.

இப்படி திருவேங்கடமுடையானுக்கு அத்யந்த ப்ரியராய் ஆசார்யநிஷ்டராயெழுந்தருளியிருந்த அனந்தாழ்வானுக்குத் திருப்பதி கோவிந்தராஜன் ஸந்நிதியிலுள்ள மதுரகவி ஸந்நிதியில் அவருக்குப் பக்கத்தில் அர்ச்சைத் திருமேனியைப் பெரியோர் எழுந்தருளப் பண்ணியிருக்கிறார்கள், மதுரகவி சாத்துமுறையன்று கோவிந்தராஜன் மதுரகவிகள் ஸந்நிதிக்கு எழுந்தருளி மதுரகவிகளுடன் மதுர கவி தாஸரான அனந்தாழ்வானுக்கும் ஸகல மரியாதைகளையும் செய்வித்துச் சாத்துமுறை கண்டருளுகிறார். திருமலையில் அனந்தாழ்வான் தோட்டத்தில், அனந்தாழ்வான் உடையவர் திருவடியைச் சார்ந்த பிறகு முளைத்ததோர் மகிழமரத்தை, 'எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே' என்கிறபடியே திருவேங்கடமுடையான் அனந்தாழ்வானாகவே மதித்து, தீர்த்தவாரிக்கு அடுத்தடினத்தில் நடைபெறும் தோட்டவுத்ஸவத்திலும், அனந்தாழ்வான் பரமபதித்ததாகக்

கருதப்படும் நாளான திருவாடிப் பூரத்தினத்தன்றும் மாலையில் தோட்டத்திற்கு எழுந்தருளி அமுது செய்து விநியோகமானவுடன் அம்மரத்திற்குப் புஷ்ப மாலையும் ஸ்ரீ சடகோபனும் ஸாதித்துக் கௌரவிக்கிறார்.

## பெரிய ஜீயர்ஸ்வாமி

திருமலைநம்பி திருநாட்டுக்கெழுந்தருளிய பிறகு அனந்தாழ்வான் ஒருவரால் ஸந்நிதி நிர்வாஹம் செய்வதன் அருமையை எண்ணிய எம்பெருமானார் அனந்தாழ்வானோடு ஆலோசித்து, அனந்தாழ்வானுடைய அந்தேவாஸியாய் இதற்கு முன்பே ஏகாங்கி ஸ்ரீ வைஷ்ணவராக ஸந்நிதியின் நிர்வாஹத்திற்குத் தம்மாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்ரீ ஸேனாபதி ஜீயருக்கு த்ரிதண்ட காஷாயங்களைத் தந்து பூர்ணஸந்யாஸியாக்கித் திருமலையில் தம்முடைய மடத்தில் ஸ்தாபித்தருளினார். 'வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்' என்று எல்லாவடிமைகளும் செய்யப் பாரித்த ஆழ்வார் வாசிகமாகவன்றிக் காயிகமாக அடிமை செய்யாத குறை தீர்ப்பதற்காக எம்பெருமானார் அந்த ஜீயருக்கு ஸ்ரீசடகோபஜீயர் என்று திருநாமம் சூட்டி அவரிடம் திருவேங்கடமுடையானுடையவும் ஸ்ரீகோவிந்தராஜனுடையவும் ஸமஸ்தைச்வர்ய நிர்வாஹப் பொறுப்பையும் ஒப்புவித்தருளினார். இரண்டு கோவில் சாவிகளும் இரவில் பெட்டியில் வைத்து ஸீல்வைத்து இரண்டிடங்களிலும் இருக்கும் பெரிய ஜீயர்மடத்திற்கு அனுப்பப்பட்டு, மறுபடி காலையில் ஸந்நிதி திறப்பதற்கு முன்னே பெரிய ஜீயர் ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுசெல்லும் போது எடுத்துச் செல்லப்படுகிறது. இந்த ஜீயருக்குள்ள பெருமைகள் சில முன்னமே விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

## மணவாள மாமுனிகள்

ஸ்ரீ ராமாநுஜதர்சனப்ரவர்த்தகராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த மணவாள மாமுனிகள் திருவேங்கடமுடையானைத் திருவடி தொழவேணுமென்று எழுந்தருளியவர் திருப்பதியில் மதாந்தரஸ்தரால் உபத்ரவம் வாராதபடி, கோயிலில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர்போலே நிக்ரஹாநுக்ரஹஸமர்த்தரான ஒரு ஜீயரை உண்டாக்கவேணுமென்று நினைத்துத் தம்முடைய சிஷ்யர்களில் (அஷ்டதிக்கஜாசார்யர்களில்) ஒருவராய் ராஜவல்லபராய் பகவத்கைங்கர்ய துரந்தரரான ஒருவருக்குத் திருவேங்கட ஜீயரென்ற திருநாமம் சாத்தி அரசனுடைய அனுமதியைப் பெற்று அவரை இளைய கேள்வி ஜீயராக்கித் தனியே திருப்பதியில் மடமும் கட்டிக்கொடுத்து, அவரை எம்பெருமானார் பரம்பரையில் வந்த பெரிய ஜீயருக்குத் துணையாக இருந்து எல்லா நிர்வாஹத்தையும் செய்துகொண்டிருக்கும்படி நியமித்தருளினார். பெரிய ஜீயர்க்கதினர்களான ஏகாங்கிகள் நால்வரில் யோக்கியதையுள்ளவர்கள் சிறிய ஜீயராக எழுந்தருளக் கடவர்கள் என்றும் கட்டளையிட்டருளினார். பெரிய ஜீயர் மடத்தை ஏற்படுத்திய எம்பெருமானாரே அம்மடத்தில் முதல் ஜீயராவர். அவரால் ஏற்படுத்தப்பட்ட சடகோப ஜீயர் இரண்டாமவர். மணவாளமாமுனிகளால் ஏற்படுத்தப்பட்ட சிறிய ஜீயர் பன்னிரண்டாவது பெரிய ஜீயராக ஆனார். இப்போது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்பரமஹம்ஸ ஸுந்தரராமாநுஜ ஜீயர் ஸ்வாமி நாற்பதாவது பெரிய ஜீயராவர். இந்த ஜீயர்கள் அனைவரும் பட்டாபிஷேகம் செய்துகொண்ட தேதியும் பரமபதித்த தேதியும் மிகமிக விவரமாக மடத்தில் குறித்து வைக்கப்பெற்றிருக்கின்றன. பெரிய ஜீயர் மடத்தில், மணவாளமாமுனிகளும் பதினொன்று பன்னிரண்டாம் ஜீயர்களுக்கு இடையில் பெரிய ஜீயராக இருந்ததாகவும் மடத்தின் குறிப்பில் உள்ளது

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா

பெருமாள்கோவிலில் அவதரித்து ஹஸ்திகிரிநாதரண்ணாவென்னும் திருநாமத்தையுடைய இவர் தர்சன விரோதிகளான வாதிகளைவென்றவர், லௌகிக வைதிகங்களில் மிக்க நிபுணர், ஸம்ஹாஸகாதிபதி. இவருக்கு மிக உத்தமியான தேவியும் மூன்று குமாரர்களும் உளர். கைங்கர்யத்துக்கு விரோதியென்று ஐச்வர்யங்களையெல்லாம் பகவத்பாகவத விஷயங்களில் செலவிட்டுப் பரமவிரக்தராய்க் குடும்பத்துடன் திருமலைக்கெழுந்தருளித் திருவேங்கடமுடையானை ஸேவித்திருக்க, திருமலைத்தோழப்பர் உகந்து வெள்ளிக்குடத்தைத் தந்து, 'ஆகாச கங்கையிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வந்து ஏலாதி வாஸனாத்ரவ்யங்கள் சேர்த்துப் பெருமாளுக்கு நேரே ஸமர்ப்பித்து வாரும்' என்று அண்ணாவுக்கு நியமிக்க அப்படியே அவர் திருமஞ்சனகைங்கர்யத்தை வெகுநாட்கள் நடத்திவந்தார். இப்படியிருக்கையில் கோயிலிலிருந்து ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருமலையப்பனை ஸேவிக்க வந்து நிற்க, அவருக்கு ஸேவையைப் பண்ணுவித்து, மறுநாள்காலை அவர் மணவாளமாமுனிகளின் பெருமைகளை அருளிச்செய்யக் கேட்டுக்கொண்டே ஆகாச கங்கைக்குச் சென்று திருமஞ்சனம் கொண்டு பரிமளம் சேர்க்காமலேயே ஞாபகமில்லாமல் குடத்தைத் திருவாராதனத்துக்கு உபயோகிக்கும்படி கொடுத்த அண்ணா பரிமளம் சேர்க்காததை நினைத்து அபசாரமாயிற்றே என்றார். அர்ச்சகர் அண்ணாவைப் பார்த்து 'இத்தனைநாளை விடப் பரிமளம் விஞ்சித் திருமஞ்சன வாஸனை அதிகமாயிருக்கிறதே, என்ன காரணம்' என்று கேட்க, அண்ணா மணவாளமாமுனிகளின் வைபவத்தைக் கேட்டுக் கொண்டே திருமஞ்சனம் கொண்டுவந்ததனால்தான் இப்படி வாசனை அதிகமாயிருக்கிறதென்றெண்ணி, அந்த ஸ்ரீவைஷ்ணவரை ஸத்கரித்தனுப்பினார். பிறகு சிலநாட்கள் கழித்துத் திருமலையப்பனிடம் அனுமதிபெற்று ஸ்ரீரங்கம் சென்று மணவாளமாமுனிகளை ஆச்ரயித்தார். திருவேங்கடமுடையானுக்கு இவர் செய்த திருமஞ்சன கைங்கர்யம் இவருக்குப் பெரும்பேறான மணவாள முனிகளின் ஸம்பந்தத்தைப் பெறுவித்தது இவர் செய்தருளிய ஸுப்ரபாதம் முதலிய நான்கு துதிகளே இன்றும் திருமலையில் திருக்காப்பு நீக்கும்போது அனுஸந்திக்கப்பட்டு வருகின்றன.

இத்தலத்திய விசேஷாநுஷ்டானங்கள்

(1) அனத்யயனகாலமல்லாத மற்ற காலங்களிலும், திருவாய்மொழி அல்லது கோயில்திருவாய்மொழி ஸேவிக்கும்போது உபதேச ரத்தினமாலையை நியமேன ஸேவித்தல்.

(2) திருவாய்மொழிக்குப் பூர்வோத்தரங்களில் கண்ணிநுண்சிறுத்தாம்பு ஸேவியாமல், தனியாகத் திருவாய்மொழி சாத்துமுறைக்கு மறுநாளில் ஸேவிப்பது.

(3) திருவெழுகூற்றிருக்கையையும் திருநெடுந்தாண்டகத்தில் எல்லாப் பாசுரங்களையும் இரட்டித்து ஸேவிப்பது.

(4) மற்ற ஆழ்வாராசார்யர்களுக்குப் போல் சேனைமுதலியார் தாயார் ஆண்டாள் இம்மூவர்க்கும் கோவிந்தராஜனுடைய பரிவட்டம் கட்டி ஸ்ரீசடகோபன் ஸாதித்து வஸ்த்ர - மாலைகளைப் பஹுமானமாக ஸாதிப்பது (ஸேனைமுதலியாரும் தாயாரும் ஆசார்யகோடியிலுஷம், ஆண்டாள் ஆழ்வார் கோஷ்டியிலும் சேர்ந்திருத்தல் இதற்குக் காரணமென்று பெரியோர் கூறுவர்.)

(5) கோவிந்தராஜன் கனுப்பாரி வேட்டை சித்திராபௌர்ணமியில் திருவூறலுத்ஸவம் திருமலை நம்பியின் ஐதிஹ்யோத்ஸவமான தண்ணீரமுது உத்ஸவம் இந்நாட்களில் வெகுதூரம் எழுந்தருளும்போது ஆண்டாளும் கூடவே எழுந்தருள்வது.

(6) நாச்சியார் திருக்கோலத்தினன்று பெருமாள் எழுந்தருளும் போது, பெண்ணைத் தனியே விடாமல் புருஷோத்தமனை கண்ணனையும் உடனே எழுந்தருளப்பண்ணுவது.

(7) திருவேங்கடமுடையான் திருத்துழாயைப் பஞ்சமீதீர்த்தத்தின் போது திருச்சானூரில் தாயார் மூலமாகவன்றி நேராக யாருக்கும் விநியோகியாமலருப்பது.

(8) சாத்துமுறைக் காலங்களில் பெரியஜீயர் திருத்துழாய் கொடுக்க அதைவாங்கி அர்ச்சகர்கள் சாத்துமுறை முடியும் வரை பெருமாள் திருவடிகளிலே சேர்த்துக்கொண்டிருப்பது.

(9) மூலவரிடத்தில் தவிர உத்ஸவர் எங்கு எழுந்தருளித் திருமஞ்சனமோ சாத்துமுறையோ கண்டருளினாலும் கோஷ்டிக்குத் தீர்த்தமில்லாமல் ஸ்ரீசடகோபன் மட்டும் ஸாதிப்பது.

(10) தோட்டத்தில் அனந்தாழ்வானிடம் அஞ்சியோடிய திருவேங்கடமுடையான் அப்ரதக்ஷிணமாகக் கோயிலுக்குள்வந்து புகுந்த ஐதிஹ்யத்தைக் காட்டுவதற்காக பாக்ஸவாரி என்னும் தோட்டவுத்ஸவத்தில் கோவிலிலிருந்து அப்ரதக்ஷிண மாகவே எழுந்தருள்வது.

(11) நம்மாழ்வார்க்கும் பெருமாளுக்கும் நடந்த 'மின்னிடைமடவார்' ப்ரணயகலஹத்தை, உபயநாச்சியார்க்கும் பெருமாளுக்கும் நடப்தாக உத்ஸவம் செய்விப்பது.

(12) அதியுஷ்ணமான பச்சைக் கருப்பூரப்பொடியை 50 தோலா 100 தோலா என்ற கணக்கில் திருவேங்கடமுடையான் மூலவருக்குத் திருமண் காப்பாக அணிவிப்பது. இங்ஙனே பல உள. விரிவுக்கஞ்சி இதோடு விடைபெறுகிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

சுபம்.